**உங்கள் கோரிக்கைகளை எந்த அலுவலகத்திலாவது எற்கப்படாமல் காலம் கடத்தினால் அனுப்பிடவேண்டிய தகவல் உரிமைச் சட்டத்தின் மாதிரி.**

தங்கள் கோரிக்கைகள் ஏதாவது., உதாரணமாக ஒய்வு ஊதிய நிர்ணயத்தில் முரண்பாடு ,., ஊக்க ஊதிய உயர்வு அளிக்காமை., பின் தங்கிய ஊதியம் ( arrears )அளிக்காமை., Junior getting more pay தேர்வு நிலை, சிறப்பு நிலை வழங்காமை., போன்றவை குறித்து நீங்கள் அனுப்பிய உங்கள் விண்ணப்பம் காலங்கடத்தப்படுகிறது.., முடிவே தெரியவில்லை.., என்றால் நீங்கள் அனுப்பிய விண்ணப்பத்கின் சுருக்கத்தை, நீங்கள் அனுப்பிய பதிவு அஞ்சல் எண்., ஏற்கனவே எதாவது பதில் வந்து இருந்தால் அந்தக் கடிதத்தின் எண் ஆகியவற்றை சுருக்கமாக கீழ் காணும் விண்ணப்பப் படிவத்தின் பெட்டி பகுதிக்குள் எழுதிவிடுங்கள்.

**தகவல் உரிமைச் சட்டம் 2005 ன் கீழ் செய்யப்படும் விண்ணப்பம்.**

பதிவு அஞ்சல்

ஒப்புதல் அட்டையுடன்

தேதி:

**விடுநர்.**

-----------------

-----------------

-----------------

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்

தகவல் உரிமைச் சட்டம்-2005

--------------அலுவலகம்

--------------பின் கோடு

ஐயா,

ஏற்கனவே அனுப்பிய எனது கோரிக்கையின் சுருக்கம், -----மனு தேதி -----பதிவு அஞ்சல் எண்-------

எனது மேற்காண் , நிலுவை கோரிக்கை தொடர்பாக எனக்கு தகவல் உரிமைச் சட்டம் 2005-ன் கீழ் பன்வரும் தகவல்களை தெரிவிக்க கேட்டுக் கொள்ளுகிறேன்.

1) மேற்படி எனது கோரிக்கை முதல் முதலில் தங்கள் அலுவலகத்தில் வரப்பெற்ற தேதியினையும் அதற்கு தங்கள் அலுவலகத்தில் அளித்த நடப்பு கோப்பு எண்ணையும் அளிக்க கேட்டுக் கொள்ளுகிறேன்.

2) மேற்படி எனது கோரிக்கை மனுவிற்கு அரசு ஆணை எண். 114, நாள் : 20-08-2006-ன் படி மூன்று தினங்களுக்குள் எனக்கு ஒப்புதல் சீட்டு., 30 தினங்களில் இடைக்கால பதில்., 60 தினங்களில் இறுதி பதில் அளிக்கப்பட்டு இருந்தால் அவற்றின் ஒளி நகலை அளிக்க கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி ஏதும் அளிக்கவில்லை என்றால் அதற்கு காரணமான அரசு அலுவலர் பெயர் பதவி ஆகிய விவரங்களை தெரிவிக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

3) மேற்படி எனது கோரிக்கை தங்கள் அலுவலகம் வந்த நாள் முதல் இன்று வரை எனது கோரிக்கை மீது தங்கள் அலுவலகம் மேற்கொண்ட நடவடிக்கையை நான் அறிந்து கொள்ள மேற்படி எனது கோரிக்கையை கையாண்ட தங்கள் அலுவலகக் கோப்பின், அலுவலகக் குறிப்பு உள்ளிட்ட அனைத்துப் பக்கங்களின் ஒளி நகலை அளிக்க கேட்டுக் கொள்ளுகிறேன்.

4) மேற்படி எனது கோரிக்கை தங்கள் அலுவலகத்தில் வந்த தேதிக்குப் பிறகு தங்கள் அலுவலகத்திற்கு என்ன என்ன கோரிக்கைகளுக்காக யார் யாரிடமிருந்து எந்த எந்த தேதிகளில் விண்ணப்பங்கள் வந்தன அவற்றின் மீது எந்த எந்த தேதிகளில் முடிவான ஆணைபிறப்பிக்கப்பட்டன என்ற தகவல்களை அளிக்க கேட்டுக் கொள்ளுகிறேன்.

5) மேலே குறிப்பிட்ட எனது கோரிக்கையை ஏற்பதற்கு தங்கள் அலுவலகத்திற்கு தடையாக உள்ள காரணங்கள் மற்றும் அம்சங்கள் என்னென்ன என்ற தகவல்களையும் அந்த காரணங்களுக்கான அரசு ஆணை., சுற்றறிக்கை., விவர விளக்கம் ஆகியவற்றின் ஒளி நகலையும் அளிக்ககேட்டுக் கொள்ளுகிறேன்.

6) எந்த தேதிக்குள் எனது கோரிக்கை ஏற்கப்பட்டு இறுதி ஆணைகள் வழங்கப்படும் என்ற தகவலை அளிக்க கேட்டுக் கொள்ளுகிறேன்.

7) பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறையின் அரசு ஆணை எண்.114, நாள் : 20-08-2006-ன் ஒளி நகலையும்., இலஞ்சம் ஒழிப்பு விழிப்புணர்வு தகவல் பலகை வைக்க கடைசீயாக பிறப்பிக்கப்பட்ட தமிழக அரசு ஆணையின் ஒளி நகலையும் அளிக்க கேட்டுக் கொள்ளுகிறேன்.

8) கடைசீயாக பிறப்பிக்கப்பட்ட தமிழக அரசு ஆணையின் படி தங்கள் அலுவலகத்தில் இலஞ்சம் ஒழிப்பு விழிப்புணர்வு தகவல் பலகை வைக்கப்பட்டதற்கு செய்யப்பட்ட செலவைக் காட்டும் செலவுச் சீட்டின் ( paid voucher copy ) ஒளி நகலையும் ., அந்த தகவல் பலகை தங்கள் அலுவலக பொருட்கள் பதிவேட்டில் எந்த பக்கத்தில் பதிவு செய்யப்பட்டதோ அந்த பக்கத்தின் ஒளி நகலையும் அளிக்க கேட்டுக் கொள்ளுகிறேன்.

9) நான் கோரிய தகவல்களை முழமையாக அளிக்காமல் அல்லது தவறான அல்லது பொருத்த மற்ற தகவல் அளித்தால் அப்படி செய்யும் அலுவலருக்கு என்ன என்ன தண்டனையை அளிக்க தகவல் உரிமைச் சட்டத்தின் விதிமுறைகள் கூறுகின்றன என்ற தகவலைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

10) தங்கள் பதிலில் திருப்தி இல்லை என்றால் நான் யாருக்கு மேல் முறையீடு செய்யவேண்டும் என்ற தகவலை அளிக்க கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த விண்ணப்பத்தில் நான் கோரிய தகவல்களில் ஏதாவது பிற அலுவலகத்தில் இருந்தால் அதற்காக தகவல் உரிமைச் சட்டப் பிரிவு 6(3) ன் படி நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறேன். இந்த விண்ணப்பத்திற்கான ரூ 10-க் கான நீதி மன்றக் கட்டண வில்லை ஒட்டப்பட்டுள்ளது.

தங்கள் உண்மையுள்ள,